உ

# ஞானோதயம்

ஞானம் 01 தாரண ௵ ஆடி ௴ (02- 07- 2004) உதயம் 14



ஆடி 2004

அன்பளிப்பு: ரூபா 20/-

வாதத்தின் மூலம் சைவநெறியை நிலைநாட்டிய

# வாதவூரர்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆசாரக்குற்றம் உடையவர்கள் நம்மிடத்து அன்பு இல்லாதவர்கள் ஆயினும், அவர்களுடைய உடலிலே விபூதி முதலாம் வேடங்கள் காணப்பட்டால் அவருக்கு அடிமையாக அவரை வழிபட்டுச் செயற்படுபவரே அகங்காரமமகாரங்களை ஒழித்தவராவார். சஞ்சித வினைகள், நயன தீட்சையின் போது ஒழிக்கப்பட்டன. பிராரத்துவ கன்மங்கள் சரீர நீக்கத்தோடு தொலையும். ஆகவே உடல், பொருள், ஆவி என்னும் மூன்றும் இனிமேல் உன்னுடையது அல்ல. நம்முடையதாகும். ஆகையால் இங்கே உன்னைப் போல இருந்த இக்குருவடிவை உனது மனத்தில் இருத்திப் பதிப்பாய் என்று ஞானாச்சாரியார் திருவாதவூரடிகளுக்கு வாகித தீட்சை செய்தருளினார்.

பரமபிதாவாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய உபதேச வார்த்தைகளைக் கேட்ட திருவாதவூரடிகள் தமக்கு ஏழுவகைப் பிறப்பையும் நீங்கச் செய்து உபதேசித்த ஞானாசாரியரது திருவடிகளில் சிரசு தோயவீழ்ந்து வணங்கி எழுந்து நின்று அஞ்ஞானத்தையுடைய சிறியோன் மெய்ப்பொருளாகிய சித்தாந்த நெறியைச் சந்தேகமறப் புலப்படுத்தியருளினார் என்று விண்ணப்பஞ் செய்து சிரசிலே கைகளை வைத்துக் கும்பிட்டார். மேலும் கூறுவார் மலரகிதரே இதுவரை என்னுடையதாகக் கருதிய பொருளும் இச் சரீரமும் தேவரீருடையதாகத் திருவருளால் அறிந்து சமர்ப்பித்தேன் என்று ஆன்ம போகம் ஒழிந்து நின்று நெக்கு நெக்குருகித் தம் உடம்பின் மீது தரித்த வஸ்திராபரணங்களையும் அரிமர்த்தன பாண்டியனது திரவியத்தையும் குரு சந்நிதியிலே பொருந்த வைத்து வணங்கினார். யோக மூர்த்தியாகிய பரமாச்சாரியார் சீடரது பக்குவ முதிர்ச்சியைக் கண்டு முகமலர்ச்சியோடு வீற்றிருந்தார். மேலும் அங்கே வீற்றிருக்கின்ற திருத்தொண்டர்களுக்குள்ளே மேலான ஒருவரைப் பார்த்து இப்பொருட்களை எல்லாம் திருப்பணிகளுக்கு கொடுங்கள், வறியவர்களுக்கு கொடுங்கள் என்று பணித்தார் பத்தி வலிமையுடைய திருத்தொண்டர். ஞானசாரியர் கூறிய பிரகாரம் கொடுத்து முடித்த பின்னர் திருவாதவூரடிகள் அநாதி வைத்தியராகிய சிவபெருமான் கொடுத்தருளிய பரம ஔடதத்தை உட்கொண்டு மகாரோகம் நீங்கப் பெற்றுச் சீவன் மூத்தரானார்.

வெற்றி பொருந்திய சேனைகள் பக்கத்திலே சூழ்ந்துவர முத்துச் சிவிகையின் மேல் பாண்டிய அரசனைப் போல் முன்பு வந்த வாதவூரர் இப்பொழுது திருமேனி முழுவதும் பூசப்பட்ட திருநீறும், கௌபீன உடையும், மயிர்விரிக்கப்பட்ட சிரசும், ஆனந்தம் மேலிட்ட கண்களுமாகக் காட்சி நல்கினார். சிவஞானத்தைப் பெற்றுக்கொண்ட ஞானாசாரியனை அன்போடு நோக்குவார், வீழ்ந்து வணங்குவார். பின் நடப்பார் பகலையும் இரவையும் அறியாதவராகி உன்மத்தர், பாலர், பிசாசர் என்னும் இவர்களைப் போன்று தெய்வப் பித்துடன் விளங்கினார்.

இவ்வாறாகத் திருவாதவூரரது நிலமை கண்ட அரசனது சேனாவீரர்கள் எல்லாரும் அதிசமீபத்தில வந்து திருவாதவூரடிகளை வணங்கி அவரது நிலமையை நோக்கிப் பாண்டியன் தம்மைக் காலநீட்டம் செய்வதற்கு முன்னமே செழுமையாகிய குதிரைக் கூட்டங்களைக் கொண்டு செலதலாகிய செயலை நீவிர் சிறிதும் சிந்தியாது இருக்கின்றீர். இது பெருங்குற்றமாகும் சுவாமீ! நீவிர் வருதல வேண்டும் என்று அவர்கள் அழைத்த தருணத்தில் விபூதியை அணிந்த திருவாதவூரடிகள் சேனா வீரரைப் பார்த்து மயக்க அறிவால் மேம்பட்டவர்களே நீவிர் யார்? பொய் வார்த்தைகளைப் பேச வேண்டாம். இவ்விடத்தை விட்டு அகன்றுபோம் என்று கூறினார். வாதவூரடிகளது வார்த்தையைக் கேட்ட சேனாவீராகள் தம்முள்ளே துனபப்பட்டு அவ்விடத்தை விட்டு நீங்கிப் பாண்டிய இராசனுக்குத் தெரிவிப்போம என்று சென்று அரசனை வணங்கிக் கூறுவார்கள். நின்னுடைய பெயரைப் புணைந்தவராகிய திருவாதவூரர் திருடபெருந்துறை என்னும் இடத்தை அடைந்து அங்கே பக்கத்தில உள்ள சோலையில் குருந்த மரநிழலில் வீறறிருககும் சைவ அடியார்கள சூழ்ந்திருக்க அதற்குத் தலைமை பூண்ட ஒருவர் நடுநாயகமாக வீறறிருக்க அவரைப் பார்தது மகிழ்ச்சி கொணடு அவரோடு சில வார்தைதைகளைச் சம்பாஷித்து, அதன்மேல் அவரைக் கும்பிட்டுக் கொண்டு சென்ற திரவியங்கள் அனைத்தையும் அவருக்குக்கொடுத்து கௌபீன உடையுடன் விபூதியை விரும்பி உடம்பு முழுவதும பூசிப் பித்துக் கொண்டவர்போல் விளங்குகின்றார் என்று கூறினார்கள்.

இதனைக் கேட்டதும் அரிமர்த்தன பாண்டியன் உடம்பு முழுவதும் வியர்வை சிந்தக் கோபித்து கண்கள் அக்கினி மயமாகி வான் வலிமையை உடைய அரசர்களுக்கு இபபடிப்பட்ட மதி மந்திரிகள் உளராயின் சேனை, செல்வம் ஆகிய ஆறு அங்கங்களுள் எவைதான் இருக்கும் என்று அட்டகாசஞ் செய்தார்.

நாம் குதிரைகளைக் கொள்ளும் பொருட்டு அனுப்ப அவர் வேட தாரிகளது வார்த்தையைக் கேட்டு. மதி மயங்கிய மந்திரியை வேகம் பொருந்திய தூதுவர்கள் சென்று கடும் வசனங்களைக் கூறி இந்த ஓலையைக் கொடுத்து ஒரு தினத்திலே நம்மிடம் அழைத்து வாருங்கள் என்று பணித்தான். அரசனால் ஏவப்பட்ட தூதுவர்கள் திருப்பெருந்துறையை அடைந்து வாதவூரடிகளைக் கண்டு வணங்கி பாண்டிய அரசன் கொடுத்த திருமுக ஓலையைக் காணுக என்று கொடுத்தனர். சிவபிரானது திருமுகவோலை அல்லது வேறு ஒன்றையும் காணாதவராகிய திருவாதவூரர் சிறிதும் அச்சம் இல்லாதவராய் அதனை எடுத்து வாசியுங்கள் என்றார். அது வாசிக்கப்பட்டது. அரிமர்த்தன பாண்டியன் எழுதும் ஓலை தென்னவன்பிரமராயன் என்னும் நம்மந்திரி காணுக.

நீவிர் அளவற்ற திரவியங்களைக் கொண்டு சென்று மாட்சிமைமிக்க குதிரைகளைக் கொள்ளாது அதற்குப் பதிலாக ஒரு கௌபீன உடையைக் கொண்டீர். இதனை அறிந்து நாம் துயரம் அடைந்தோம்.

வளரும்

---

# ஆடிமாத சிறப்புகள்

ஆடிமாதம் கடகசங்கிராந்தி
ஆடிப்பிறப்பு கடக சங்கிரமண புண்ணிய காலமாகும்.

ஆகமங்களிலேனுந் திருமுறைகளிலேனும் இவ்விழாவிற்கு ஆதாரங்களில்லை. என்னும சைவசமயத்தவர்க்கு இந்நாள் புனிதநாளாகும்.

உத்தராயணபுண்ணிய காலம் முடிந்து தெட்சணாயணம் ஆரம்பிக்கும் காலமாகும். ஆடி அமாவாசை பிதிர்க்கிரியைகட்கு பிரதானமானது. சைவசமயத்தவர்க்கும், வைஷ்ணவர்களுக்கும் இத்தினம் மிகப்பெரிய புண்ணியகாலமாகின்றது. சகல சர்வஜீவ ராசிகளுக்கும் உயிர்புச்சக்தி, சூரிய, சந்திரநிலையிலிருந்து உலகம் இயங்கி வருகின்றது. ஆதலினால் நமது மூதாதையர்கள் பிதிர் தேவர்கள் ஆசிகள் வேண்டி ஆடி அமாவாசையில் இறந்த ஆத்மாக்களைக் குறித்து தாயார், தந்தையர் வம்சாவழியி

னர்க்கு பிதிர்க்கடமைகளை அன்றுமுதல் இன்று வரை புண்ணிய ஷேத்திரங்களில் புண்ணியநதித் தீர்த்தங்களில் நீராடி பாவங்களைப் போக்கி பிதிர்தேவதைக்குரிய கருமங்களைக் கடமைகளைச் செய்து வருகின்றனர். இதன் பலனாக கல்வி, பொருள் இன்பமாகிய அறம், தான தருமங்களைச் செய்து இப்பூவுலகில் ஆயுள் ஆரோக்கியத்துடன் இல்லறத்தில் நல்லறமாக வாழும் மாந்தர் உலகம் புகழ்போற்ற புனிதமான புண்ணிய நாளாகும் ஆடி மாதச் சிறப்புகழ்.

ஆடியில் கற்புக்கரசியாங் கண்ணகிக்கு ஆட்டை விழா வெடுத்து நாடுவளங்கண்டது இம்மாதமெனச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. ஆடியென்னும் இயக்கனொருவன் தன் காதலியிடம் தூது விட்டுத்துயர் நீங்கியதும் இம்மாதமென்பர்.

''ஆடி விதை, தேடிவிதை
ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
ஆடி, ஆவணி ஆன புரட்டாதி
காடி தோய்த்தகன பனங்காயதைத்
தேடித்தேடித் தினமும் புசிப்பவர்
ஓடியோடி யுலகெலாம் பீச்சுவர்''

என்கின்ற பழம் பாடல்கள் பழமொழியாக முழங்குகின்றன.

ஆடிப்பிறப்பின் மகத்துவம் பற்றி நவாலியூர்ப்புலவர் அவர்கள் பாடிய,

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் மானந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

என்னும் பாடலும் விளங்குகின்றது.

## ஆடிப்பூரம்:

இத்தினத்தில் உமாபார்பதியானவள் பக்குவமானவள், பருவமங்கையானவள் என்பதினால், ஆடிப்பூரவிழா தீர்த்தம், ஆடிப்பூரவிழா மகா உற்சவத்திருவிழா, திருமணவிழாக்கோலம் சிவாலயங்களில் உள்ள அம்பாளுக்கு விஷேடமாகக் கொண்டாடுவார்கள். இன்னும் பல அம்மன் ஆலயங்களில் புனித நீராட்டு விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. மேலும் அலங்காரத்திரு விழாவாகக் கொண்டாடி வருகின்றனர் சைவசமயத்தவர்கள், இப்படியாக இந்துக்கள் வாழுமுலகில் ஆடிமாதப் பெருமை சிறப்புகழடைகின்றது.

சிவபக்தி, நல்லொழுக்கம், நல்லபண்பு, நற்சிந்தனை, நற்செயல், நற்கருணை, நல்ல தாய், தந்தையரைப் பெற்ற நாம் நன்மக்கட்பேற்றில் வாழ்வதே இவ்வுலகம் மகிழ்ச்சியடைகின்றது. இவ்வுலகில் அனைவரும் சகோதரத்துவம், நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் யாவரும் வாழவேண்டும் என்பது சைவசமயாசாரம் வழங்குகின்றது. அதனால் ஆத்மீகம் வளர்கின்றது. ஆன்மா விடுதலையடைகின்றது. இவ்வாறு சான்றோர் காட்டிய வழியில் சிந்தனை செய்வோமாக.

ஆனி, ஆடி மாதங்களில் வரும் வளர்பிறை தேய்பிறையாகிய இவ்விருகாலங்களில் வரும் சதுர்த்திவிரதனுஷ்டான பூஜை அறுகம்புல்லினால் செய்துவந்தால் ஆயுள் ஆரோக்கியம், ஐஸ்வர்யம் ஆகிய சுப பலன்கள் கிட்டுகின்றன என சைவசமயாசாரம் வழிகாட்டுகின்றது.

கணபதீஸ்வரம்
சித்தாந்த பண்டிதர்
ஷர்மாஜி

---

# சைவநாற்பாதங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## ஞானம்:

சைவநாற்பதங்களில் இறுதியாகக் கனிபோன்று உள்ளது ஞானம் ஆகும். ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்வதே ஞானம் எனப்படும் அதாவது சிவனை உருவம், அருவம் அருவுருவம் என முத்திருமேனிகளையும் கடந்து, சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் திருமேனியுடையவராய்க் கண்டு அறிவால் வழிபடுதல் ஞானம் எனப்படும். இதில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என நான்கு அம்சங்கள் உள்ளன. ஞானநெறியைச் சன்மார்க்கம் எனவும் அழைப்பர். அன்பு மேலீட்டால் தன்னை மறந்து தன் நாமங் கெட்டு, தலைவனைத் தலைப்படும் தலைவி போல ஆன்மா பதியை அடையும் மார்க்கமே சன்மார்க்கம் எனப்படும். இதனையே திருநாவுக்கரசர் தனது திருத்தாண்டகத்தில்,

''முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்த
ளகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாடன் னாமங் கெட்டா
டலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே?

எனக் குறிப்பிடுகின்றார்.

புராணங்கள், வேதங்கள், சிவாகமங்கள், சாஸ்திரங்கள், வேறுபல சமயநூல்கள் என எல்லாக் கலைஞானங்களையும் ஆராய்தல் வேண்டும். இது ''கேட்டல்'' எனப்படும். இவ்வாறு ஆராய்ந்து பல சமயங்களிலும் கூறப்படும் பொருள்கள் பலவும் கீழானவை என்று கண்டு கழித்தல் வேண்டும். இது சிந்தித்தல் ஆகும். இப்படிக் கழிந்த பின பதி, பசு, பாசம என்ற முப் பொருள்களின் இயல்புகளையும் வகுத்துக்காட்டி பாசம், பசு இரண்டிற்கும் தலைவனாய் விளங்கும் பரமசிவனது சிறப்பியல் பைத் தெளிவாகக் காட்டும் சிவாகம நெறியே மேலான சித் தாந்தமென உணருதல் வேண்டும். இது தெளிதல் . ஆகும். தெளிந்தபின் அறிபவன் அறிவு, அறியபபடும் பொருள் என்றும் வேற்றுமையின்றிச் சிவத்துடன் அத்துவிதமாகக் கலந்து நிட்டை கூடல் ஆகும்.

ஞானநெறியில் நிற்போர் குருவைக் காணலும், பூசித்த லும், நினைத்தலும், தொட்டுக்கும்பிடுதலும், குருவின் புகழ் பாடுதலும், திருவடிகளைச் சிரத்திற் சூடுதலும் ஆகிய குருபத்தி செய்யும் நெறி சன்மார்க்கம். இது உலகத்தவர்க்கு உலகச் சார் பினை ஒழித்து முத்திச் சார்பினைத் தந்து, பேரின்பத்தை ஊட் டும் எனத் திருமூலர் தனது திருமந்திரத்தில் பின்வருமாறு கூறு கின்றார்.

''தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகம் சூடக்
குருபத்தி செய்யும் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கம் தானே''

இவ்வாறு ஞானசாதனை செய்து வருகையில் பொய் யறிவாகிய அஞ்ஞானம் சூரியனைக் கண்ட பனிபோல விலகி விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையே சிவத்

தோடு சேர்ந்திருக்கும் நிலை ஆகும். சிவமாகிய சத்தின் முன்னே பாசமாகிய அசத்து நில்லாது சிவப்பேரொளியின் முன் பாசமாகிய இருள் எவ்வாறு நிற்க முடியும்? இதனை ''யாவையும் சூனியம் சத்தெதிர்'' எனச் சிவஞானபோதம் கூறுகின்றது. அதாவது சிவமாம் தன்மைபெற்ற ஆன்மா சிவத்தையன்றிப் பிறிதொன்றையும் காணாது. அது தன்னையும் சிவமாகவே காணும். பழுக்கக் காய்ச்சிய இரும்பு எவ்வாறு தன் கருமை நிறம் மாறித் தீயின் நிறம் பெற்றதோ அவ்வாறே முத்திநிலையில் ஆன்மா சிவமாம் தன்மைபெற்று விளங்கும். அவ்வாறு நிற்பினும் சிவம் ஆன்மாவுக்குத் தன்னை அனுபவிக்கக் கொடுத்து ஆன்மாவுடன் ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் நிற்கும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பம். இந்தக் கலப்பே அத்துவித (இரண்டும் அற்ற) முத்தி ஆகும். இதனை

''தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக் கொள்''

என்ற திருவருட்பயன் பாடல் விளக்குகின்றது. இம்முத்தியை சாயுச்சிய முத்தி எனவும் பரமுத்தி எனவும் கூறுவர்.

நமது சமயகுரவர்களில் மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்தில் நின்று ஞானப்பழமாகத் திகழ்ந்தார். அவர் சீவன் முத்தராய் இருந்த நிலையில் தாம் பெற்ற அனுபவத்தைச் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்'' எனத் தமது ஞானகுருவைப் புகழ்ந்துள்ளார்.

ஞானத்திலும் சிறந்த பக்குவநிலை வேறு இல்லை. அதுவே யாவினும் உயர்ந்தது. ஞானபாதத்தில் நின்று பெறும் முத்தியே மேலானது என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

''ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே.''

நாமும் சைவநாற்பாதங்களின் வழிநின்று ஒழுகி இறை பதம் அடைவோமாக.

முற்றும்

செல்வி. ப. உருத்திராதேவி

# கந்தபுராணம்

சிவ : சண்முகவடிவேல்

கந்தசுவாமிக் கடவுளுடைய கதையைக் கட்டுரைப்பது கந்தபுராணம்.

கந்தபுராணம் உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்க காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது.

உற்பத்திகாண்டம் தேவர்களுடைய சிறுமையையும் ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தமையையும் உரைக்கும்.

அசுரகாண்டம் சூரனாதியோர் தோற்றத்தையும் அசுரர் களுடைய மேன்மையையும் அறையும்

மகேந்திரகாண்டம் முருகப்பெருமானுடைய திருவுளப்படி வீரவாகுதேவர் வீரமகேந்திரபுரத்திற்குத் தேவர்சிறைவிடும்படி சூரபன்மாவிடம் தூதுசென்றமையை மொழியும.

யுத்த காண்டம் தேவாசுர யுத்தத்தை விரித்துரைக்கும்.

தேவகாண்டம் முருகப்பெருமான் தெய்வயானையம்மை யார் திருமணத்தையும் இந்திரனை மீட்டும் தேவ உலகாதிபதி யாக்கி முடி சூட்டினமையைத் தெளிவுபடுத்தும்.

தக்க காண்டம் சிவபெருமான் வீரபத்திரக்கடவுள் மூலம் தக்க யாகத்தைத் தகர்த்தமையும் தேவர்களுடைய இன்னலுக் கான மூல காரணத்தைச் சொல்லித்தரும்.

கந்தபுராணம் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து விருத்தப்பாக்களால் ஆனது. கச்சியப்பசிவாச்சாரியார் பத்திச் சுவை நனி கொட்டச் சொட்டத் தமிழ் இன்பமாகப் பாடினார். கந்தன் கருணை, கச்சியப்பர் கந்தபுராணம் பாடக் கைகொடுத் தது. கச்சியப்பர் காஞ்சியம்பதியில் கற்றோர் அவை முன்னர் கந்தபுராணத்தை அரங்கேற்றினார். கந்தபுராண கலாச்சாரம் ஈழத்தமிழரிடையில் நன்கு வேரூன்றியுள்ளது.

நன்றியை மறப்பதால் வரும் நாசமும் நன்றியை மற வாமையால் வரும் நலமும் கந்தபுராணத்தின் உயிர்நாடிக் கரும் பொருள். கந்தபுராணத்தைக் காதலித்து ஓதினால் இந்திர சம் பத்தோடு இன்புறுவர். இட்ட சித்திகள் கிட்டுவர், சிவகதி சேர் வர்.

கந்தபுராணம் திருவருள் ஊற்றெடுக்கும் கதை. கந்த புராணத்தைப் பயன் விரிப்பார் வீடுநெறிச் செல்வர். ஆராய்ந் திடுவார்கள் வீட்டின்பம் அடைவர். ஐயந் திரிபறக் கற்றவர் முத்தியை அடைவர். கற்க முயல்பவர் இறைவன் கழலடி சேர் வர் ஓதும்போது உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கிக் கேட்பவர் வீடுநெறிப் பாலுறுவர்.

அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங்
- கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

அறிவெனப்படுவது துன்பம் துடைத்தல்
செறிவெனப்படுவது மும்மையுஞ் செறிதல்
ஆண்மையெனப்படுவது ஐம்புலன் வென்றல்
கேண்மையெனப்படுவது கேட்டிடத்துதவல்
அருமை யெனப்படுவ தவநெறி வழுவாமை
பெருமையெனப்படுவது பிறனில் விழையாமை
அற மெனப்படுவது ஆருயிர் ஓம்பல்
உறவெனப்படுவது உற்றுழி நிற்றல்
வாய்மையெனப்படுவது வருந்தா துரைத்தல்
தூய்மையெனப்படுவது உள்ளந் தூய்மை
இன்பமெனப்படுவது ஈறிலின்பம்
அன்பெனப்படுவ(து) தார்வமுடைமை
தவமெனப்படுவ(து) தைம்புலன் வெறுத்தல்
பதமெனப்படுவது கொல்லா விரதம்.